# 35 இலட்சம் தமிழர்களின் தலைவர்

# "கார்ட்போட் இடி அமீனும்!"


# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60 | தொலைபேசி: 23411 | நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2008 | றஜபு 18 | ஆனி 22 (6-7-77) புதன் | புத்தகம் 31 | இதழ் 11


## தொண்டமான்மீது யூ.என்.பி. குண்டர்கள் தாக்கு!

நுவரெலியா தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மகாசிவம் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் பயமுறுத்தப்பட்டார்.

கடந்த செவ்வாய் கிழமை 28-7-77ல் அவர் தனியாக அலுவலகத்துக்கு சென்று கொண்டிருந்தபோது ஒரு ஜீப்வண்டியில் வந்து ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் அவரை இடைமறித்து 'நீங்கள் யாழ்ப்பாணத்தவர் இங்குள்ள மலையக தமிழ் மக்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குப்போட விடாமல் தொண்டமானுக்கு வாக்குகளை போடுவதற்கு தூண்டுகிறீர்கள். நுவரெலியாவில் காமினி திசாநாயக்காவையோ, ஐக்கியதேசியக் கட்சியையோ தாக்கி பேசுபவர்களை நாங்கள் சும்மாவிட மாட்டோம். தலையைச் சீவி பெட்டியில் வைத்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவோம் என்றும் தலைவர்தொண்டமானை 'காட்போட் இடி அமின்' என்றும் வர்ணித்தார்கள். இனிமேல் தொண்ட

—8-ம் பக்கம் பார்க்க

# குமாரின் சுய இச்சை வேடம் அம்பலம்!

## சிறீலங்காசுதந்திரக்கட்சியின் கையாள் அவர் என்பது நிருபணம்!

"நானும் தமிழ் ஈழத்துக்கு ஆதரவுதான்; தேர்தலில் வெற்றிபெற்றால் கூட்டணியுடன்தான் சேர்வேன்' என்று கூறிக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை எதிர்த்து சுயஇச்சையாக தனது அரசியலை ஆரம்பித்த திரு. குமார் பொன்னம்பலத்தின் சுயரூபம் அம்பலமாகிவிட்டது. அவரது அரசியல் பின்னணியென்ன? அவரை தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் போட்டிக்கு நிறுத்தியுள்ள சக்தி எது என்பது இப்போது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

தமிழ் இனத்தை அடிமை நிலைக்குத் தள்ளியதும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டதுமான புதிய அரசியல் சட்டத்தைக்கொண்டு வந்ததும், கடந்த ஏழு ஆண்டுகளாக தமிழ்பேசும் மக்களின் மீது கொடூர ஆட்சி நடத்தி வந்ததுமான சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவோடுதான் சுய இச்சை வேடத்தில் திரு. குமார் பொன்னம்பலம் போட்டியிடுகிறார் என்ற உண்மை இப்போது சந்திக்கு வந்துவிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முப்பெருந் தலைவர்களில் ஒருவராகவிளங்கியவர் அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவாகள். வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில், தனிநாடு அமைப்பதொன்றின்மூலமே ஈழத்தமிழினம்தலைநிமிர்ந்து தன்மானத்தோடு வாழமுடியும் என்று நீதிமன்றத்திலே முழங்கியவர் அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம். அவரது மகனான குமார் பொன்னம்பலம், இப்போது யாழ்ப்பாணத்தொகுதியில் தமது தந்தை தலைமை தாங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக சுயஇச்சை வேட்பாளராகப் போட்டியிடுவது தெரிந்ததே;

—8-ம் பக்கம் பார்க்க



## இவ்வாரப் பகிடி!

"மூன்று வருட காலத்தில் தமிழர் பிரச்சினைகளை தீர்த்து வைப்பேன்; இன்றேல் பதவி துறப்பேன்!"

—நல்லூர் சு. க. வேட்பாளர் சி. அருளம்பலம்

# "இந்தி திணிக்கப்படுவதை தமிழ் நாடு அனுமதிக்காது!"

## புதிய முதல்வர் எம். ஜி. ஆர், எச்சரிக்கை!

'இந்தியை இந்தியாவின் ஏக ஆட்சி மொழியாக்குவதையோ—அதை தமிழ்நாட்டு மக்கள் மீது திணிப்பதையோ தமிழ்நாடு அரசு அனுமதிக்காது. தமிழ் நாட்டில் தமிழும் இரண்டாவது மொழியாக ஆங்கிலமும் இருக்கும். மத்தியில் ஆங்கிலமும் இந்தியுடன் துணை ஆட்சி மொழியாக நீடிக்கவேண்டும். இந்தியை மட்டும் இந்தியாவின் ஒரே ஆட்சிமொழியாக்குவதையோ. அதை தமிழ்நாடுமீது திணிப்பையோ அண்ணா திமுக அரசு பார்த்துக்கொண்டிருக்காது! தமிழக மக்களுடன் சேர்ந்து இந்தித் திணிப்பை எதிர்ப்போம்'!

மேற்கண்டவாறு தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள அ. இ. அண்ணா திமுக தலைவர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார். முதலமைச்சராகப் பதவியேற்றபின்னர், அவர் முதன் முதலாக இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இந்தியை மட்டுமே நாட்டின் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற பீகார் மாநிலத்தின் தீர்மானம் நாட்டில்—குறிப்பாக இந்தி பேசாத மாநிலங்களில் பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

—4-ம் பக்கம் பார்க்க

## சுதந்திரன் ஆசிரியருக்கு மட்டுநகரில் கொடும்பாவி!

### பிய்த்து எறிந்தனர் இளைஞர்கள்!

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களுக்கும் தமிழேந்தல் ஈழவேந்தன் அவர்களுக்கும் மட்டக்களப்பில் சில தமிழின விரோதிகள் கட்டித் தொங்கவிட்டிருந்த கொடும்பாவிகளை ஆத்திரம்கொண்ட தமிழ் இளைஞர்கள் பிய்த்து சுக்கு நூறாக எறிந்தனர். இந்தச் சம்பவம், சென்ற 1-7-77ல் நடைபெற்றது.

கொடும்பாவிகள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த இடத்தில் "யாழ்ப்பாணத்தானுக்கு இங்கு என்ன வேலை"யென்று எழுதப்பட்டும் காணப்பட்டது. மட்டக்களப்பு 3ம் வட்டாரத்தில் கூட்டணியின் ஒரு வேட்பாளரான திரு. செ. இராசதுரை அவர்களின் இல்லத்துக்கு அருகில் இச் சம்பவம் நடைபெற்றது. குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் தமிழின விரோதிகள் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு என்ற கூச்சலைக் கிளப்பிவிட்டு தேர்தலில் தாம் அடையவிருக்கின்ற தோல்வியிலிருந்து தம்மைக் 'காப்பாற்றிக் கொள்ள இறுதி நேர சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தொட்டதற்கெல்லாம் 'யாழ்ப்பாணத்தான்' என்ற

—8-ம் பக்கம் பார்க்க

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'களிறு எறிந்து பெயரும்' வீரக்காளை கல்குடா வேட்பாளர் சம்பந்தமூர்த்தி!

**தந்தை செல்வாவின் வழியில் அடிபிசகாது தமிழ்ஈழ விடுதலைப் போராட்ட வழியில் நடந்துவருபவர்கள் கல்குடா தொகுதியின் தன்மானத் தமிழ் மக்கள் 1965, 1970 பொதுத்தேர்தல்களின்போது, கல்குடாத்தொகுதிக்குள் நுழைந்து தமிழ்இன விடுதலைப் பயிரை துவம்சம் செய்துவரும் மதம்பிடித்த யூ. என். பி. யானையை வாக்குச் சீட்டுக்கள் என்னும் துப்பாக்கி வேட்டுக்களினால் யூலை 21 பொதுத்தேர்தலின்போது சுட்டுத்தள்ளுவதற்கு தயாராக குறிபார்த்து காத்திருப்பவர்கள் கல்குடாத்தொகுதி தமிழ் மக்கள். இந்த வீரமக்களின் தானைத்தளபதியாக—"களிறு எறிந்து பெயரும்" வீரக்காளையாக—இன்று விளங்குகிறார் இளைஞர் சி. சம்பந்தமூர்த்தி.**

கல்குடாத் தொகுதி சிங்களக் குடியேற்றத்தினால் எப்போதும் ஆபத்து சூழ்ந்துள்ள ஒரு தொகுதி. அமரர் பொ. மாணிக்கவாசகர் பா. உ.வாக இருந்த காலத்தில் அவர் பல குடியேற்றத்திட்டங்களை ஏற்படுத்தி அங்கு தமிழ் மக்களைக் குடியேற்றி, சிங்களக் குடியேற்றத்தினின்றும் கல்குடா தொகுதியை பாதுகாத்துவைத்திருந்தார். அவரது பெரும்பணியை வடமுனைக்குடியேற்றத் திட்டம் இன்றும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கிறது.

இன்று இத்தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. சம்பந்தமூர்த்தி —அமரர் மாணிக்கவாசகரின் சொந்த மருமகனுவர்; இளைஞர், துடிப்புள்ளவர்; இயக்கத்துக்கு விசுவாசம் நிறைந்தவர்; எப்போதும் சிரித்த முகத்துடன் எவருக்கும் உதவிபுரிய ஓடி வருபவர். இவர்தான் சம்பந்தமூர்த்தி.

பன்குடாவெளியைச் சேர்ந்த திரு. பெ. சின்னத்தம்பிப் போடியார் தம்பதியவர்களின் மூன்றுவது புதல்வனுக 1937ம் ஆண்டு பிறந்தார். சம்பந்தமூர்த்தி தனது ஆரம்பக்கல்வியை பன்குடாவெளி அரசினர் பாடசாலையில் மேற்கொண்ட அவர் பின் மட்டக்களப்பின் பிரசித்தி பெற்ற சிவானந்தா வித்தியாலயத்தில் உயர்கல்வியைப் பயின்றுர். அதன் பின் கண்டி விவசாயப் பாடசாலையில் விசேட டிப்ளோமாப் பட்டம் பெற்று குடியேற்ற அதிகாரியாக அரசாங்க சேவையில் சேர்ந்தார்.



வவுனிக்குளம், சம்மாந்துறை, பக்கியலை, கித்துள் போன்ற குடியேற்றத் திட்டங்களில் கடமையாற்றி அம்மக்களின் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெற்றுர். பாடசாலையில் மாணவராய் இருக்கும் போது பேச்சுப்போட்டி, விளையாட்டுப்போட்டி ஆகிய துறைகளில் பலவெற்றிக் கிண்ணங்களைத் தட்டிக் கொண்டார். இவர் மட்டக்களப்பு மாவட்ட காணி ஆணையாளர் திணைக்கள வெளிநிலை ஊழியர் சங்கக் காரியதரிசியாகவும், குடியேற்ற அதிபர்கள் சங்கத்தின் மாவட்டப் பிரதிநிதியாகவும் இளம் விவசாயிகள் சங்கத்தலைவனுகவும், கல்குடாத் தொகுதியிலுள்ள பல கலாச்சார சமூக மத ஸ்தாபனங்களின் முக்கிய பதவிகளை வகித்துவருகிருர்.

மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்றவரும், இளைஞர்களின் நெருங்கிய நண்பனுகவும் ஏழைகளின் தோழனுகவும் விளங்குகிருர்.

ஐ. தே. கட்சித் தலைவரான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களால் "மந்திரி" என அறிமுகப்படுத்தப்பட்ட திரு. தேவநாயகத்தை எதிர்த்துப்போட்டியிடும் திரு. சம்பந்தமூர்த்தி அவர்கள் பொதுமக்களின் நிறைந்த ஆதரவைபெற்று வருகிருர்.

கூட்டணிசார்பில்போட்டியிடும் திரு. சம்பந்த மூர்த்திக்கே தமிழ் பொதுமக்களின் ஆதரவு உண்டு என்பதை எடுத்துக்காட்டுவதற்கு அவரை எதிர்த்துப் போட்டியிடும் திரு. தேவநாயகம் அவர்கள் முன்பு கூறியிருந்த பின்வரும்கூற்று ஒன்றே போதுமானது.

"இந்த நாட்டிலேயிருக்கின்ற நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதம் தமிழர்கள் தமிழர் கூட்டணியின் கருத்தை ஆதரிப்பவர்கள் என்று இந்த இடத்தில் உறுதிப்படுத்திச்சொல்ல விரும்புகிறேன்!"

—இது தேவநாயகம் அவர்கள் மக்களின் நாடியைப் பிடித்துப் பார்த்து தேசிய அரசுப்பேரவையில் உறுதிப்படுத்திக்கூறிய கருத்தாகும். இந்தக் கருத்தை உண்மையாக்குவதுபோல, கல்குடாத் தொகுதியின் தொண்ணூறு வீதமான தமிழ் வாக்காளர்களும் இன்று தமிழர் கூட்டணியின் பின்னுல் அணிவகுத்து நிற்கிருர்கள். அவர்கள் கூட்டணி வேட்பாளர் திரு. சம்பந்தமூர்த்திக்கு யூலை 21ம் நாள் வெற்றி வாகை சூட்டி, திரு. தேவநாயகத்தின் மேற்கண்ட வாக்கைத் தீர்க்கதரிசன வாக்காக ஆக்கப்போவது நிச்சயமாகிவிட்டது.

—ஈழதாசன்

# பண்டாரவன்னியன் பரம்பரையினர் நாம் தனிநாடு காணும்வரை ஓயமாட்டோம்!

## முல்லைத்தீவு வேட்பாளர் செல்லத்தம்பு அறைகூவல்!

**1970**-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சிச் சார்பில் வவுனியாத் தொகுதிப் பிரதிநிதியாக பாராளுமன்றம் அனுப்பி வைத்தீர்கள். இந்நாட்டில் சிங்களப் பெரும்பான்மையின ஆட்சி தமிழர்களை ஒழித்துக்கட்டக்கூடிய பல்வேறு இன ஒழிப்புத் திட்டங்களைத் திட்டமிட்டு வெகு தீவிரமாகச் செயற்படுத்தி வந்தது. 1972ம் ஆண்டு மே மாதம் 22ம் நாள் புதிய அரசியல் சட்டத்தைத் தயாரித்து தமிழ் இனத்தை ஒழித்துக்கட்டி, தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்து ஒரு தனிப் பௌத்த சிங்கள நாடாகஇந்நாட்டை உருவாக்குவதற்கு புதிய அரசியல் சட்டம் வழி வகுத்தது.

இத்தனை அநியாயங்களையும், அநீதிகளையும் பாரபட்சங்களையும், இன ஒழிப்பு நடவடிக்கைகளையும் பொறுக்க முடியாது தந்தை செல்வா அவர்களின் வேண்டுகோளின் பேரில் தமிழ் மக்களின் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்று சேர்ந்து 14-5-1972ல் தமிழர் கூட்டணியை நிறுவி உருவாக்கிய அன்று தொடக்கம் இன்றுவரை தமிழ் ஈழமே எமது குறிக்கோளாகக் கொண்டு பல போராட்டங்களை நடத்தி வெற்றியும் கண்டுள்ளோம்.

பின்னர் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியமைக்கப்பட்டு இழந்த தமிழ் ஈழத்தை மீட்கும் பணியில் தீவிர கவனம் செலுத்தி வந்திருக்கின்றேம். கடந்த 5 வருடங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் எவ்வாறு செயல்பட்டேனே அதே போல் என்றும் தொடர்ந்து தமிழ் ஈழம் காணும்வரை உழைக்க ஆவலாக உள்ள என்னைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழத்தில் முல்லைத் தீவு என்னும் புதிய தொகுதியில் தனது வேட்பாளரை நியமித்துள்ளது. கடந்த 5 வருடங்களும் மறைந்த எம் தலைவர்கள் இட்ட பணிகளை விசுவாசமாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் கறைபடாக் கரங்களுடனும் எவ்வாறு ஏற்று நடந்து கொண்டேனே அதேபோல் தொடர்ந்தும் இழந்த எம் மண்ணை மீட்கும் பணியில் உறங்காமல் உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

தமிழ் ஈழம் காண்பதே எமது குறிக்கோளாகக் கொண்ட என் மீது சில அடிவருடிகளும் மாற்றுக் கட்சியினரும் வீண் பொய்ப் பிரசாரங்களை உங்கள் மீது திணிக்க பல கோணங்களிலும் முயற்சி செய்வதாக அறியும் அதே வேளையில் தமிழ் ஈழ வேட்கை கொண்ட நீங்கள் வீண் பொய்ப் பிரசாரங்களை நம்ப மாட்டீர்கள் எனப் பூரணமாக நம்புகின்றேன். சென்ற 5 ஆண்டுகளாக தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் ஒத்துழைக்காதிருந்தது மட்டுமல்ல கூட்டணியைத் திட்டி அவர்களது கொள்கை பிழையெனக் கூறித்திரிந்தவர், தமிழ் இனத்தை நசுக்கிவந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அந்த ஒத்துழைப்பின் பெறுபேற்றால் உத்தியோக உயர்வும், சில பதவிகளும் பெற்று இன்று சுயேட்சை வேட்பாளராக நின்று நானும் கூட்டணியை ஆதரிக்கின்றேன் என்று சொல்லி உங்கள் ஆதரவை நாடும் வேட்பாளரை மானமும்உணர்ச்சியுமுள்ள முல்லைத்தீவு வாக்காளப் பெருமக்கள் ஏற்க மாட்டார்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

இழந்து போன தன்னுட்சியை தமிழீழம் மீளப் பெறுவதா? அன்றேல் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு நிரந்தர அடிமைகளாக வாழ்வதா என்பதனை நிர்ணயிக்கும் இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 25 தொகுதியில் நியமித்துள்ளது. எம் முன்னேர்களான இராவணன், எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற பல மன்னர்கள் ஈழத்தை ஆண்டு வந்தனர். நாம் ஆண்டுவந்த பரம்பரை, அடிமைத்தனம் ஒழிப்போம், மீண்டும் தமிழ் மண்ணில் "தனியாட்சி தமிழாட்சி கண்டிடுவோம், கொற்றம் அமைத்திடுவோம், அப்பணிக்கு எம் குருதியைக் கொட்டிடுவோம், கோலத் தமிழ் மொழிக்கு வாழ்வுபெற்றுத் தந்திடுவோம், ஆதிக்கக் காரர்களே உம் அடக்குமுறைக்கு அஞ்சோம், வங்கம் நமக்கின்று வழிகாட்டி நிற்கின்றது" என்று எழுச்சிப் பண் இசைத்தபடி 35 இலட்சம் தமிழ் மக்களின்



இதயத்தில் மூண்டுள்ள எழுச்சியை, விடுதலை உணர்ச்சியை, உணர்வை ஆட்சியாளருக்கும், உலக நாடுகளுக்கும் எதிரொலித்திட 21-7-77ல் நடைபெறப் போகும் தேர்தலில் உதயசூரியனுகிய எமது விடுதலைச் சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டுப் பல்லாயிரம் மேலதிக வாக்குகளால் தமிழ்த்தாய் வெற்றி வாகை சூடும்படி செய்ய அவள் மக்களாகிய உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

—முல்லைத்தீவு தொகுதியில் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் இரும்பு மனிதர் திரு. சே. மா. செல்லத்தம்பு, முல்லைத்தீவு தொகுதி வாக்காளர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

**சுதந்திரன்**
(வாரம் இருமுறை)
சந்தா விபரம்

ஓராண்டு — ரூபா. 50.00
அரையாண்டு — ,, 25.00

சுடர்
(கலை இலக்கிய திங்களிதழ்)
ஓராண்டு — ரூபா. 12.00

அனுப்பவேண்டிய முகவரி:
நிர்வாகி சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது தானப்பா யூ. என். பி.
# புரிந்துகொள்ளடா தமிழா!

'தொன்மை மறவேல்' என்பது ஔவை மூதாட்டியின் அறிவுரை. இந்த அறிவுரையை மறந்ததால்—இன்று சில தமிழர்கள் அவதிப்படுகிறார்கள்; கூடா வழியில் ஓட நினைக்கிறார்கள்!

இந்த நாட்டில் தமிழினத்தை அழித்தொழித்து ஆழக்குழி தோண்டிப் புதைக்க ஆரம்பத் திட்டம் வகுத்தது ஐக்கிய தேசியக் கட்சி தான் என்பதை மறந்து இன்று ஜே. ஆர். துதிபாடுகிறார்கள்!

தமிழினத்தைதோலிருக்க சுளை விழுங்குவதுபோல்விழுங்கிஏப்பம் விட்டுவிட திட்டமிட்டு சதிவலையை விரித்தவர்கள் ஐ. தே. கட்சியினர் என்பதை மறந்து ஜே. ஆருக்கு ஆலோலம் பாடுகிறார்கள்!

ஐ. தே. கட்சியின் மாயை வலைக்குள் மீண்டும் தமிழினம் வீழாதிருக்க அது கட்டவிழ்த்துவிட்ட தமிழின விரோத நடவடிக்கைகள் சில வற்றை இதோ தருகிறோம்!

* 1944ம் ஆண்டே சட்ட சபையில், சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக வேண்டும்; சிங்களம் மட்டுமே தமிழ் பிள்ளைகளினதும் போதனா மொழியாக வேண்டும்; சிங்களம் பரீட்சைகளில் கட்டாய பாடமாக்கப்படவேண்டும் என்று பிரேரணை கொண்டுவந்தவர் இதே ஜே. ஆர். ஜெயவர்த்தன.

* 1948ம் ஆண்டு, இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தையும் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டத்தையும் கொண்டு வந்து, இந்திய வம்சாவளி மலைநாட்டுத் தமிழ் மக்கள் 10 இலட்சம் பேரின் குடியுரிமை வாக்குரிமையைப் பறித்து, அவர்களை நாடற்றவர்களாக, அரயல் அனாதைகளாகஆக்கியது—ஐ. தே. கட்சி!

* இச்சட்டங்களின் மூலம் இலங்கை வாழ் தமிழர்களையும் முஸ்லிம்களையும் நிரந்தரமான சந்தேகப் பிரஜைகளாக்கியது ஐ. தே. கட்சி!

* எட்டுத் தமிழர்களை தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்து வந்த மலைநாட்டுத் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் கூடக் கிடைக்கமுடியாதபடிசெய்து அவற்றைச் சிங்களவருக்கு பறித்துக்கொடுத்தது ஐக்கிய தேசியக்கட்சி!

* பட்டிப்பளையெனும் பழந்தமிழ் ஊரை 'கல்லோயா' என சிங்களப்பெயராக மாற்றியமைத்தது ஐ. தே. கட்சி!

* பட்டிப்பளை,அம்பாறை அல்லை, கந்தளாய் திருகோணமலை, மூதூர், வவுனியா ஆகிய தமிழ்பேசும் பிரதேசங்களில் — தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகத்தில் — திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது ஐ. தே. கட்சி! இதன் மூலம் முஸ்லிம்களினதும், தமிழர்களினதும் நிலங்களில் சிங்கள ஆக்கிரமிப்புக்கு வழி வகுத்தது ஐ. தே. கட்சி!

* இச்சிங்களக் குடியேற்றங்களினால் — 1500 சதுர மைல் தமிழ்பேசும் மக்களின் நிலம் ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருக்கிறது; தனித் தமிழ் நாட்டில் சேருவில், அம்பாறை என்ற இரண்டு சிங்களவர்களுக்கான தொகுதிகள் உருவாக்கப் பட்டுவிட்டன!

* 1956ம் ஆண்டு பெப்ரவரி 20-ம் திகதி களனி மாநாட்டில் தமிழ் மக்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளும் 'சிங்களம மட்டும்' என்ற ஏகாதிபத்திய மொழிக் கொள்கையை பிரகடனப்படுத்தியது ஐ. தே. கட்சி; அக்கொள்கையில் மருந்தளவுகூட இன்றுவரை மாற்றியமைக்கப்படவில்லை!

* 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்து நிறைவேற்றியது ஐ. தே. கட்சி!

* 1957ம் ஆண்டு தமிழ் ஈழத்துக்கு சுயாட்சி வழங்குவதுடன், தமிழ் ஈழத்தில சிங்களக் குடியேற்றததுக்கு முற்றுப்புள்ளி வைகக வழி வகுத்த பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்கு யாத்திரை செய்து—சிங்கள மக்களை தூண்டிவிட்டு — ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தவர் ஐ. தே. க. தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன.

* 1958ம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக இனக் கலவரத்தை தூண்டிவிட்டு — தமிழர்களை வெட்டுங்கள்; குத்துங்கள்; கொல்லுங்கள் என்று தனது 'சியரட்ட' ஏட்டில் கொலைக் கவிதை பாடியது ஐ. தே. கட்சி!

* 1960ம் ஆண்டு தமிழினத்தின் சார்பில் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த குறைந்த பட்சக் கோரிக்கைகளை திமிருடன் ஏறெடுத்துப்பார்க்கவும் மறுத்தது ஐக்கிய தேசியக்கட்சி!

* 1965ம் ஆண்டு தமிழரசுக்கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாது, தமிழ் சமுதாயத்தை ஏமாற்றியது ஐ. தே. கட்சி.

* 1966ம் ஆண்டு தமிழரசுக்கட்சியின் நெருக்கடியினால் கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி விசேட சட்ட விதிகளை பின்னர் அமுல்படுத்த மறுத்தது ஐக்கிய தேசியக்கட்சி!

* கோணேசர் கோவிலை புனித நகராக்க மறுத்ததுடன், இன வெறியன் ஆர். ஜி. சேனநாயகாவுக்கு தமிழர் நிலமாம் திருகோணமலையில் 500 ஏக்கர் நிலத்தை தாரைவார்த்தது ஐ. தே. க.!

* தமிழ் ஈழத்தில் புத்தூர், கரவெட்டிபோன்ற இடங்களில் சிங்களபௌத்த பாடசாலைகளைத் திறந்து, தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களத்தில் போதனை நடத்தி தமிழினத்தை இனமாற்றம் செய்ய முயற்சித்தது ஐக்கிய தேசியக்கட்சி!

* தமிழ் இந்துக்களுக்கு, உத்தியோக சலுகைகளையும், ஆசைவார்த்தைகளையும், உதவிகளையும் கொடுத்து அவர்களை பௌத்தர்களாக்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கியது ஐ. தே. கட்சி!

* தாய்மொழியே தமிழ்ப் பிள்ளைகளின் கட்டாய போதனாமொழியாக இருக்க வேண்டுமென்பதை ஏற்காது போதனாமொழியை தெரிவு செய்யும் உரிமையைபெற்றாரிடம் ஒப்படைத்தது ஐ.தே. கட்சி!

* 1971ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில், பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்கவேண்டும் என்று திருத்தம்கொண்டு வந்து தனது பௌத்தவெறியை காட்டிக்கொண்டது ஐ. தே. கட்சி!

* அரசியல்நிர்ணயசபையில், தமிழ் மொழி, இன, உரிமைகள் சம்பந்தமாக தமிழ் பிரதிநிதிகள் கொண்டு வந்த தீர்மானங்கள்—திருத்தங்கள் அனைத்தையும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தோடு சேர்ந்து எதிர்த்து வாக்களித்துதோற்கடித்தது ஐக்கிய தேசியக் கட்சி!

* 1974ம் ஆண்டு மன்னார் இடைத்தேர்தலின் போது புதிய அரசியல் சட்டத்தை ஐக்கிய தேசிய கட்சியும் ஏற்கவில்லையென்று பிரசாரம் செய்யப்பட்டது; அரசியல் சட்டத்துக்கு சவால் விடுத்து தேசிய பேரவைக்கு வெளியே யாரும் பேசக்கூடாது என்று (அமிர்தலிங்கம் ட்ரயல்— அற்—பார் வழக்கின்போது) தேசிய அரசுப்பேரவையில் 1976 ம் ஆண்டு டாக்டர் என். எம். பெரேரா ஒத்திவைப்புப் பிரேரணைகொண்டு வந்த நேரத்தில் — அரசியல் சட்டத்தை தமதுகட்சி எதிர்க்கவில்லையென்றும் அதன் தகைமைக்கு (validity) தாங்கள் சவால் விடவில்லையென்றும், ஜனாதிபதியைதெரிவு செய்யும் முறையிலும், நீதிமன்ற சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற இந்த இரண்டு அம்சத்திலுமே தாம் அக்கறை கொண்டுள்ளதாகவும் கூறியவர் இதே ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான்!

**இப்படிப்பட்ட ஐ. தே. கட்சியின், இப்போதைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும்—தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமது கட்சிதரவிருக்கும் இடம் என்ன என்பது குறித்து பேச்சு மூச்சு எதுவுமேயில்லை! உழுத்துப்போன வட்ட மேசையும், சதுரமேசையுமே எஞ்சி நிற்கிறது!**

இதை உணர்ந்து தமிழ் சமுதாயம், தூரத்துப் 'பச்சை'யில் மயங்காது—சிங்கள ஏகாதிபத்திய யூ. என். பி.க் கட்சியை தமிழ் ஈழத்திலிருந்து யூலை 21ம் நாள் நடைபெறவிருக்கும் பொது தேர்தலில் வேரோடு களைந் தெறிவார்களாக.

—ஈழதாசன்

## வெல்வது நம் படைதான்!

(கலகாவூர்க் கவிராயர்)

தங்கநிகர் தமிழீழத் தமிழர்க்காகத்
தாரணியில் தலைநிமிர்ந்து முழக்கமிட்டே,
பொங்கியெழும் பொன்னறிவின் புனிதத்தோடு
பூரித்த உள்ளத்தின் உணர்ச்சியோடும்,
சிங்கமெனச் சீறியெழும் இளைஞர்படை
சீராகப் பேரணியாய் முன்னே செல்ல,
எங்களினத் தலைவர்படை எழுச்சிபாடி
ஏறுபோல் களம்நோக்கிச் செல்தல்காணீர்!

களத்தினிலே தமிழ்த்தாயைப் பழித்தேநிற்கும்
கயவர்களைக் காலடியில் கசக்கியென்றும்
மனத்தினிலே மாத்தமிழை மறந்துபேசும்
மதியீனப் புல்லர்களை மண்ணில்சாய்த்து
உளத்தினிலே உறுதியோடு ஓரணியாய்
உதிக்கின்ற கதிரவனின் கொடியைநாட்டுந்
தினத்தினிலே எம்படையின் வெற்றியொலி
திக்கெட்டும் கேட்குமது நீயும்கேளாய்!

வெல்லுமது நம்படைதான்! வெற்றி! வெற்றி!
வீறுகொண்ட தமிழினத்தின் எழுச்சிபாடிச்
செல்லுமது நம்படைகள்! சிறப்புற்றோங்கச்
சினந்தெழுந்து தமிழீழ மண்ணைக்காத்துக்
கொல்லுமது கொடியவரின் படையையெங்கும்
குவலயத்தில் மண்ணோடு மண்ணாய்ப்போக!
வெல்லுவது இனியெவர்தான்! எமக்கேவெற்றி!
வீரத்தின் விளைநிலத்தைக் காப்பாய் இன்றே!

## '1980ம் ஆண்டுக்கிடையில் தமிழ்ஈழம்உருவாகியேதீரும்!'

### பாண்டிருப்பில் சம்சுதீன் பேச்சு!

'முஸ்லிம் ஐக்கிய முன்னணியினராகிய நாங்கள், ஏன் தமிழர் விடுதலைக் கூட்டணியினரோடு சேர்ந்தோம்? என்பதற்கு பல பத்திரிகைகளிலும், பல கருத்தரங்கு மேடைகளிலும் 'கொள்கை விளக்கம்' கொடுத்துள்ளோம். தங்களைத் தாங்களே, முஸ்லிம்களின் தலைவன், என்று கூறி, முஸ்லிம்களை ஏமாற்றி, சிங்கள இனவெறி பிடித்த யூ. என். பி. யிடம் முஸ்லிம்களை ஈடுவைத்துச் சுகபோகமாக வாழ்ந்துவந்தார்கள் சில முஸ்லிம் பிரமுகர்கள். இவர்களைவிட மோசமாக, முஸ்லிம்களைக் கண்களுக்கெதிரே வைத்துச் சுட்டுக் கொல்லும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலும் மஜீதும், முஸ்தபாவும், பதியுதீனும் தொங்கிக்கொண்டிருக்கிறார்களே, இவர்களா முஸ்லிம்களுக்குத் தலைவர்கள்?



—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘உரிமை எதையும் கோருவதற்கு சிறுபான்மையினருக்கு அருகதை கிடையாது’

## இதன் பின்னும் சேர்ந்து வாழமுடியுமா? மானிப்பாய் வேட்பாளர் தர்மலிங்கம் கேள்வி!

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் த. வி. கூட்டணியை ஆதரித்து தீர்மானம் இயற்றிய பின் உடுவில் கிளை பகிரங்கக் கூட்டம் ஒன்றை 30-6-77 அன்று திரு. வே. கந்தையா அதிபர் தலைமையில் மானிப்பாய் வெஸ்லித் தியேட்டரில் நடாத்தியது.

அக் கூட்டத்தில் மானிப்பாய் தொகுதி த. வி. கூ. வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசும்போது குறிப்பிட்டதாவது:

“ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபட வேண்டுமென்று 1960ம் ஆண்டே நான் உணர்த்தியிருக்கிறேன். 1960ம் ஆண்டு நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி முகாமையாளராக இருந்தேன். அப்போது திரு. வி. பொன்னம்பலம் அங்கு ஆசிரியராக இருந்தார். அவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு முகாமையாளராக இருந்த நான் லீவு வழங்கினேன். அத்துடன் அவர் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளையும் கண்டித்துப் பேசினார். என்னுடனும் போட்டியிட்டார். இன்னொரு ஆசிரியருக்கும் நான் லீவு வழங்கினேன். அவர் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டார். நான் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தும் ஏனைய கட்சிக் கொள்கைக்காரரையும் மதித்ததற்குக் காரணம் அவர்களுக்கு அரசியல் ஈடுபாடும் அரசியல் கொள்கையும் இருக்க வேண்டும் என்பதற்கேயாகும்.

ஆசிரியர்கள் சமுதாயச் சிற்பிகள், மக்களை வழி நடத்துபவர்கள், இவர்களுக்கு அரசியல் உரிமையில்லையென்றால் வேறு யாருக்கு இருக்கவேண்டும்?

தமிழீழ ஜீ. ஜீ. காங்கிரஸ் சார்பில் சாவகச்சேரியில் போட்டியிடும் திரு. வி. குமாரசுவாமியை அன்று உருவாக்கியவர்களே ஆசிரியர்கள் என்பதை அவர் மறந்து ஆசிரியர் அரசியலில்



ஈடுபடலாமா என்று கேட்கிறார். ஐ. தே. கட்சியிலிருந்து பிரிந்து சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவை அரசியல் வானில் சுடர்விடச் செய்தவர்கள் ஆசிரியர்கள் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

உலக சரித்திரத்தில் விடுதலை அடைந்த நாடுகளில் தொழிற் சங்கங்கள் விடுதலைக்காற்றிய பங்கு மகத்தானது. விடுதலைப் போராட்டத்தில் ஆசிரியரும், மாணவரும் ஒதுங்கியிருந்தால் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற மாட்டா.

தமிழ் ஈழ விடுதலைக்காக நடைபெறும் ஜூலை 21 தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல. தமிழினம் இன்று திருப்பு முனை ஒன்றில் நிற்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்றபோது தமிழரும் சம வாய்ப்புடன் வாழ முடியுமென்று நம்பினர். ஆனால் இன்றோ அவர்கள் சிங்கள மக்களின் அடிமைகளாகவே தம்மை எண்ணத் தலைப்பட்டுள்ளனர்.

அன்று தமிழ் காங்கிரசும், தமிழரசும் சிங்களவருடன் தமிழரும் ஒற்றுமையாக வாழமுடியுமென நம்பின. நாம் எதிர்க்கவேண்டிய இடத்தில் எதிர்த்தோம். ஒத்துழைத்தோம். ஒப்பந்தங்கள் செய்தோம். நாம் மூன்று பிரதமர்களுடன் ஒப்பந்தங்கள் செய்தோம். மூன்றுபேரும் அவ் ஒப்பந்தங்களை அமுல் நடாத்த முடியாமல் விட்டதற்கான காரணம் ஒன்றாகவே இருந்தது. “ஒப்பந்தங்களை நிறைவேற்ற நாம் விரும்பினோம். ஆனால் ஒப்பந்தங்களை நிறைவேற்ற சிங்கள மக்கள் விடுகிறார்களில்லை” என்பதே பதிலாக இருந்தது. படித்த சாதாரண சிங்கள மக்கள் இந்த நாட்டில் தனிச்சிங்களம் அமுல் நடாத்தப்பட வேண்டுமென்றும், பௌத்தம் அரச சமயமாக இருக்க வேண்டுமென்றும் தான் விரும்புகிறார்கள்.

இரு ஆண்டுகளுக்கு முன் வடகிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற உபயோக மொழியாக தமிழை அங்கீகரிக்கும் சட்டமூல விவாதத்தில் நான் பேசினேன். நீதிமன்ற மொழி சட்டமூலத்திற்கு தமிழ் சட்ட அந்தஸ்தும் [illegible] நீதி மந்திரி விரும்பினால் உத்தரவிடுவது அல்லது நீக்குவது என்ற நிலை இருக்கக் கூடாதென்றும் கூறினேன். இது அடுத்தநாள் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது. அன்று விருந்துபசார வைபவமொன்றில் அறிமுகமான பிரதம நீதியரசர் எச். என். ஜீ. பெர்னாண்டோ நீங்கள் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர். உரிமை என்று உங்களுக்கு எதுவும் இல்லை. பெரும்பான்மை இனம் தருவதைப் பெற்றுக்கொண்டு திருப்தியடையவேண்டியது தான் என்று பிரதம நீதியரசரே கருத்துக் கூறினார். இதனால் அதை அறியக்கூடியதாக இருக்கின்றது? சிங்களவர் உரிமைதரத் தயாரில்லை என்பதை நாம் முற்றுமுழுதாக நம்புகிறோம். இவற்றின் தாக்கங்களினாலேயே தமிழீழ முடிவுக்கு வந்தோம். ஜனநாயக நாடுகளிலும், சோஸலிச நாடுகளிலும் தேசிய இனங்களின் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு நூற்றாண்டுக்கு முன் தமிழர்கள் 33 நாடுகளில் வாழ்ந்து வந்தார்கள். இன்றோ அவர்கள் 3 நாடுகளில் தான் வாழ்கிறார்கள். மலேஷியாவிலுள்ள சிங்கப்பூரிலும், பாரதத்தில் தமிழ் நாட்டிலும், ஈழத்திலுமே தமிழர்கள் இன்று வாழ்ந்து வருகிறார்கள்.

ஈழத்திலும் 150 வருடங்களுக்கு முன் மேற்கு கரையோரப் பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தமிழர்கள். இன்று அவர்கள் சிங்களவர்களாக மாறிவிட்டார்கள். உதாரணமாகச் சொல்வதானால் அரசியலமைப்பை உருவாக்கிய கொல்வின் ஆர். டி. சில்வாவின் பூட்டனார் ஒரு தமிழர். கொல்வின் இன்று சிங்களவர். இதனை எவரும் மறுக்கமுடியாது.

1917ல் சோவியத் நாட்டில் 5 பிரதேசங்கள் பிரிந்து சென்றன. லெனின் அதனைப் பிழையென்று கூறவில்லை. துரோகமென்று சொல்லவில்லை. இத் தேர்தலில் வெற்றியல்ல முக்கியம். இத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைக்கு வழங்கும் தீர்ப்பு என்ன? என்பதே ஒரே கேள்வியாக இருக்கின்றது. நாம் பாராளுமன்றம் சென்று 1972ற்கு முன் உரிமைகளைக் கேட்டோம்: உரிமைகளுக்காக வாதாடினோம்.

1972ல் புதிய அரசியல் அமைப்பில் தமிழர் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட பின் இழந்த நாட்டை மீட்டுப்பெற முடிவு செய்துள்ளோம்.

தனி நாட்டைக் கேட்கும் நீங்கள் உலக நாடுகளை ஏன் எதிர்பார்க்கிறீர்கள்? உள்நாட்டு விஷயத்தில் உலக நாடுகள் தலையிடமாட்டா என்று சிலர் குரல் எழுப்புகிறார்கள். தனி நாட்டை உருவாக்குவது என்பது உள்நாட்டு விஷயம் மட்டுமல்ல.

நீண்டகால சிறைவாசத்தின் பின் சிறையிருந்த இளைஞர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள். குற்றமிருந்தால் நீதிமன்றம் சென்று குற்றத்தை நிரூபியுங்கள் அல்லது விடுதலை செய்யுங்கள் என்று உண்ணாவிரதமிருந்தனர். அப்போது

—5-ம் பக்கம் பார்க்க

## இந்தி திணிக்...

—1-ம் பக்கத் தொடர்

1967ல் அண்ணாயுகம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பின்னர், தமிழ்நாட்டின் மூன்றாவது முதலமைச்சராக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 30-6-77 வியாழன் காலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்றார். பல இலட்சக்கணக்கான மக்கள் சென்னையில் கூடி திரு. இராமச்சந்திரன் முதலமைச்சர் பதவி ஏற்கும் காட்சியை கண்டுகளித்தனர். எம். ஜி. ஆர். அவர்களின் மந்திரி சபையில் 14 அமைச்சர்கள் இருக்கின்றனர்.

முதல்வராகப் பதவி ஏற்றுள்ள திரு. எம். ஜி. ஆர். அவர்கள், இலங்கையிலுள்ள கண்டியில் பிறந்தவர். இலங்கைத் தமிழ்மக்களின் பிரச்சினைகளில் அக்கறையும் அனுதாபமும் கொண்டவர். 1972ம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் பெருந் தலைவர் மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் தமிழகம் சென்றிருந்தபோது, அவரை வரவேற்று உபசரித்ததுடன், ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுடன் மனம்விட்டு விவாதித்து பல விஷயங்களை தெரிந்துவைத்திருப்பவர்.

அதேபோல நிதியமைச்சர் பதவி ஏற்றுள்ள நாஞ்சில் மனோகரனும், கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் நெருங்கிய நண்பர். ஈழத்தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவர்.

பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவியேற்றுள்ள பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள், முன்னர் திமுக அமைச்சரவையில் இருந்தபோது ‘உரிமை வேட்கை’ என்ற பத்திரிகையை சிறப்பாசிரியராக இருந்து நடத்தியவர். அந்தப் பத்திரிகையில் ‘செம்பியன்’ என்ற பெயரில் வெளியிடப்பட்ட கட்டுரைகள், இலங்கைத் தமிழர் பிரச்சினையை தெளிவுற எடுத்துக் காட்டின. அந்தக் கட்டுரைகளின் தொகுப்பு ஒரு நூலாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோல கைத்தறித் துறை அமைச்சராகப் பொறுப் பெற்றிருக்கும் துடிப்புள்ள முஸ்லிம் இளைஞரான ராஜாமுகம்மது 1972ம் ஆண்டு தந்தை செல்வா அவர்களுக்கு சென்னை மாநகர சபை அளித்த வரவேற்புக்கு பொறுப்பாக இருந்தவர் அப்போது சென்னை மாநகர சபை செயலாளராக இருந்த ராஜாமுகம்மது தந்தை செல்வா அவர்களுக்கு சென்னை மாநகர சபையின் சார்பில் வரவேற்பு அளித்த தமிழுணர்ச்சிமிக்க இளைஞர்.

இப்படி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளையறிந்தவர்களைக் கொண்ட எம். ஜி. ஆர். அரசு, தேவை ஏற்படும்போது, இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு தனது தார்மீக ஆதரவை வழங்கும் என்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், அ. இ. அ. திமுகவும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒரு முகமாக குரல் கொடுக்கும் என்றும் தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## தேர்தல் முழக்கம்

ஒரு குரல்: சங்கம் வைத்து ஆண்ட தமிழன் சரிந்து நிற்பதேன்?

பல குரல்: எங்களுக்கு நாடு ஒன்று இல்லையாதலால்.

ஒருவர்: சேர சோழ பாண்டியர்கள் சீரழிந்ததேன்.

பலர்: போர் பொறாமை போட்டியாலே பிளவுபட்டதால்.

ஒருவர்- ஆண்ட தமிழன் மீண்டும் ஆள என்ன செய்யணும்?

பலர்: ஆடி மாதம் கூட்டணிக்கு வாக்குப் போடணும்,

ஒருவர்: ஈழநாட்டில் தோன்றியுள்ள தமிழர் கூட்டணி.

பலர்! உலகம் வாழும் தமிழர் போற்றும் உரிமை நாட்டணி.

—தமிழ் மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் பெயரைச் சொல்லி வாக்குக் கேட்டு வருபவன் நானல்ல!"

## தம்மீது சுமத்தப்பட்ட பொய்ப்பிரச்சாரங்களுக்கு சட்டத்தரணி சந்திரகாசன் ஆப்பு!

குமார் பொன்னம்பலத்தின் கோட்டையென யாழ் நகரில் சொல்லப்பட்டு வந்த முஸ்லீம் வட்டாரத்தில் த. வி. கூட்டணிவேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் இதுவரை பல கிளைகளைத் திறந்திருக்கின்றார். முஸ்லீம் வட்டாரத்திலேயே பல பகிரங்கக் கூட்டங்களை வைத்திருக்கிறார்.

முஸ்லீம் மக்கள் வாழும் பகுதியில் ஐந்து சந்தி பிரசித்தமான ஒரு சந்தி, அவர்களின் பொது நிகழ்ச்சிகள் இங்குதான் நடைபெறும். இந்த இடத்தில் திரு. யோகேஸ்வரனை ஆதரித்து சில கிழமைகளுக்கு முன் ஒரு மாபெரும் கூட்டம் நடைபெற்றது.

அதன் பின் குமாருக்கும் ஒரு கூட்டம் நடைபெற்றது அக்கூட்டத்தில் குறிப்பிட்ட குற்றச் சாட்டுகளுக்குப் பதில் அளிப்பதற்காக முஸ்லிம் வாக்காளப் பெருமக்கள் இரண்டாவது தடவையாகவும் 1-7-77ல் ஒரு மாபெரும் கூட்டத்தை திரு. யோகேஸ்வரனை ஆதரித்து நடாத்தினர். அக்கூட்டத்தில் அமரர் செல்வாவின் மகன் திரு. சந்திரகாசனும் பேசினார்!

தந்தை செல்வாவின் மகன் திரு. சந்திரகாசன் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட்டதாலேயே வாக்குரிமை இழந்து இத்தேர்தலில் போட்டியிடவில்லை என்று குமாரின் கைக்கூலிகள் குற்றம் சாட்டி வந்தனர். அவர்கள் குற்றம் சுமத்தியதற்கு எதுவித ஆதாரமும் இல்லை என்பதை திரு. சந்திரகாசனே அன்று தமிழ்பேசும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

"என்மீது பல கட்டுக் கதைகளை யாழ் தொகுதியில் கட்டவிழ்த்து விட்டிருப்பதாக எனக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவற்றிற்குப் பதில் அளிக்கவேண்டியது எனது கடமையாகும். நீதி மன்றத்தில் நான் தண்டிக்கப்பட்டதாலேயே இத்தேர்தலில் எனக்கு போட்டியிடும் வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று திரு. குமாரின் ஆட்கள் பகிரங்கக் கூட்டத்தில் கூறியுள்ளார்களாம். அது மிகவும் தவறான கருத்தென்பதுடன் அப்பட்டமான பொய்யுமாகும்.

"நான் மூன்று தடவைகள் இந்தநாட்டுப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டது உண்மைதான். எதற்காகக் கைது செய்யப்பட்டேன். கடத்தல் வியாபாரம்செய்து கைது செய்யப்படவில்லை. அந்நிய செலாவணி மோசடி செய்து கைதுசெய்யப்படவில்லை. திருகோணமலைப் பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேறியவர்களிடமிருந்து எமது மரபுவழித் தாயகத்தைக் காப்பதற்கு முயற்சித்தபோது தான் கைதியானேன். அப்போது நான் நிரபராதியென்று விடுதலை செய்தார்கள்.

"1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின்போது துண்டுப் பிரசுர விநியோகம் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்டு ஒருநாள் முழுவதும் பொலிசாரின் அடிக்கும் உதைக்கும் உட்பட்டேன். நாள்முழுதும் அடித்த பொலிசார் பின்னர் என்னை விடுதலை செய்தனர்.

"இதே ஆண்டு மறுபடியும் கைக்குண்டு வைத்திருந்தேனென்று சந்தேகித்துக் கைது செய்யப்பட்டேன். நான் வைத்திருந்தது கைக்குண்டல்ல சீனவெடி என்று கோர்ட்டில் தெரிவிக்கப் பட்டபின் விடுதலை செய்யப் பட்டேன். நான் மூன்று தடவைகளும் தமிழீழ விடுதலைப் போருக்கு உதவியதாகவே கைது செய்யப்பட்டேனேயன்றி வேறெக்காரணத்துக்குமாக அல்ல என்பதைப் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உண்மை இவ்வாறிருக்க எனக்கு தேர்தலில் போட்டியிட டிக்கட் கிடைக்காததற்கு நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டது தான் காரணம் என்று கூறுவது அறியாமையே.

"நான் அப்பாவின் பெயரைச் சொல்லித்தேர்தலில் போட்டியிட விரும்பியிருந்தால் எனக்கு நிச்சயம் நியமனம் கிடைத்திருக்கும் நான் என்றைக்கும் அப்பாவின் பெயரைச் சொல்லித் தேர்தலுக்கு நிற்கவும் மாட்டேன், உங்களிடம் வாக்குக் கேட்கவும் வரமாட்டேன். நான் தமிழ் மக்களின் போராட்டங்களில் கலந்துகொண்டு தமிழீழ விடுதலைக்குப் பாடுபட்டு அதன்பின் ஒரு வேளை எனக்கு வாக்களிக்கக்கேட்டு வருவேனேயன்றி அப்பாவின் மகன் நான் கேட்கிறேன் எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்டு வரமாட்டேன் என்பதை உங்களுக்குச்சொல்லி வைக்கவிரும்புகிறேன்.

"இளைஞர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டபோதுஎவ்வித பலனும்எதிர்பார்க்காது திரு. யோகேஸ்வரன்நீதிமன்றங்களில் அவர்களுக்காக வாதாடினார். அதனாலேயே இளைஞர்களின் ஆதரவு அவருக்கு இருக்கின்றது. த. வி. கூட்டணி யாழ் தொகுதி அமைப்பாளராகவும் பல வருடங்களாக திரு. யோகேஸ்வரன் இருந்து வருகிறார். எவரும் எந்த நேரமும் சந்தித்து உதவி பெறக்கூடிய திரு. யோகேஸ்வரனை யாழ்தொகுதி மக்கள் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெறச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன்".

என்று திரு. சந்திரகாசன் பேசி முடித்தார்.


---

## அடலேறு ஆலால் தயார்! 'யூனியர்' ஜீ. ஜீ. தயாரா?

தம்மை ஒரு வேட்பாளராக நியமிக்கும் படி தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் கோருவதற்கு திரு. குமார் பொன்னம்பலத்துக்கு என்ன தகுதியிருக்கிறது? இதுபற்றி என்னுடன் விவாதிப்பதற்கு ஒரு பொதுமேடைக்கு யாழ் சுய இச்சை வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் வருவாரா?" ஒரு கூட்டத்தில் அடலேறு மு. ஆலாலசுந்தரம் சவால்விட்டிருந்தார்.

இந்த சவாலை ஏற்ற குமார் பொன்னம்பலம், சவால்விடும் திரு. ஆலாலசுந்தரமே பொது மேடையை அமைத்துவிட்டு தம்மை அழைத்தால், தாம் வரத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

அடலேறு ஆலாலசுந்தரம் விடவில்லை. மேடை அமைப்பதற்கு தாம் தயார் என்றும்; குமாருக்கு வசதியான நாளையும் நேரத்தையும் உடன் தெரிவித்தால், இதற்கான பொலிஸ் அனுமதியை பெற்று மேற்கொண்டு ஒழுங்குகள் செய்யவிருப்பதாகவும், ஒரு பதிவு செய்யப்பட்ட கடுகதிக் கடிதத்தை குமார்பொன்னம்பலத்துக்கு ஆலாலசுந்தரம் இப்போது அனுப்பிவைத்துள்ளார். அடலேறுவின் கடிதத்துக்கு குமார் பதிலளிப்பாரா?



தமிழர் விடுதலைக்கூட்டணி ஆதரவாளரான திரு. புத்தொளி அவர்கள் எழுதிய "தந்தை செல்வா" எனும் நூலை மில்க்வைற் அதிபர் திரு. மு. கனகராசா அவர்கள் மேடையில் வெளியிட்டு வைத்தார்.

## செல்லச்சாமியை ஆதரித்து கொழும்பில் கூட்டம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் இ. தொ. கா. வேட்பாளராக கொழும்பு மத்தியில் போட்டியிடும் திரு. செல்லச்சாமியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் 8-7-77 வெள்ளிக்கிழமை மாலை மருதானை 'ரவர்' படமாளிகைக்கு அண்மையில் நடைபெறும். இக் கூட்டத்தில் பிரதம பேச்சாளர்களாக திரு. வி. தர்மலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. வண்ணை ஆனந்தன், ஜனுப் ஆப்தீன் ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

### உரிமை எதையும்...

—4-ம் பக்கத் தொடர்

இங்கிலாந்தில் வெள்ளையர்கள் இதுபற்றிக் கேட்க ஒரு சபையை நியமித்தனர். வணக்கத்துக்குரிய ஸ்கொட் என்பவர் இங்கிலாந்திலிருந்து ஸ்ரீமாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். நீதி விசாரணையின்றி சிறையில் வைத்திருப்பவர்களை விடுங்கள். அல்லது நீதிமன்றம் கொண்டு வாருங்கள். சிறையில் அடைத்துவைக்காதீர் என்று இதுபற்றி நல முடிவு கிடைக்கவில்லையானால் எமது அரசாங்கத்தை இது பற்றி நடவடிக்கை எடுக்க வற்புறுத்துவோம். வர்த்தகத் தடைவிதிக்கக் கோருவோமென்று எழுதினார். உலக அபிப்பிராயம் ஸ்ரீமா மனதை தட்டிக் கேட்டதற்கு இது ஒரு உதாரணம். வெளிநாட்டு உதவியில் தங்கியிருக்கும் அரசாங்கம் அந்நாட்டு அபிப்பிராயத்தைத் தட்டிக்கழிக்க முடியாது.

வரப்போகும் பொதுத் தேர்தல் தமிழ் மக்களின் சர்வசன வாக்கெடுப்பாகும் என்பதை மனதில் கொண்டு அனைவரும் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தி த. வி. கூ. அபேட்சகர்களை வெற்றிபெறச் செய்யவேண்டும்.

—புத்தொளி

## கிளிநொச்சி தொகுதி பிரச்சாரக் கூட்டங்கள்

6-7-77 புதன்கிழமை இரவு பல்லவராயன்கட்டுவேரவில்

7-7-77 வியாழக்கிழமை இரவு விஸ்வமடு—தர்மபுரம்

8-7-77 வெள்ளிக்கிழமை இரவு வன்னேரிக்குளம்

9-7-77 சனிக்கிழமை இரவு கிளாலி—இயக்கச்சி

10-7-77 ஞாயிறு இரவு இராமநாதபுரம் — திருநகர் கனகபுரம்

11-7-77 திங்கள் இரவு ஆனையிறவு—கண்டாவளை

12-7-77 செவ்வாய் இரவு புளியம் பொக்கனை—பெரிய குளம்

13-7-77 புதன் இரவு புலோற்பளை

14-7-77 வியாழன் இரவு முரசுமோட்டை— ஜெயந்தி நகர்

15-7-77 வெள்ளி இரவு இராமநாதபுரம் — வட்டக் கச்சி

16-7-77 சனி இரவு உருத்திரபுரம்

17-7-77 ஞாயிறு இரவு பூனகரி

18-7-77 திங்கள் இரவு பளை

19-7-77 செவ்வாய் இரவு கிளிநொச்சி

20-7-77 தேர்தல் ஒழுங்குகள்

21-7-77 தேர்தல் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா உன் சிந்தனைக்கு!

## கொரிய மக்களின் இன விடுதலைப் போராட்டம்

ஒரு காலம் கொரிய நாடு சோவியத் ரஷ்யாவின் ஒரு பகுதியாக விளங்கிற்று. கடல் யுத்தத்தில் யப்பானியரிடம் தோல்வியுற்ற ரஷ்யர்கள், அந்நாட்டை நட்டஈடாக யப்பானிய அரசிடம் ஒப்படைத்தனர். கொரியர்களுக்கென்று தனிப்பட்ட மொழி கலாச்சாரமுண்டு. கொரிய மக்களை யப்பானியர்களாக மாற்றுவதற்கு அதாவது இனமாற்றம் செய்வதற்கு யப்பானிய அரசு திட்டமிட்டு தங்கள் மொழியை இவர்களில் திணித்து, இவர்களின் மொழியை அழித்துக் கொண்டே வந்தது. கொரியர்களும் தங்களால் இயன்றளவு இதை எதிர்த்து வந்தனர். இரண்டாவது மகாயுத்தத்தின்போது, யப்பானியர்களின் துணையாக கொரியர்களும் யுத்தம் புரிந்தனர். இந்த இரண்டாவது மகா யுத்தத்தில் யப்பானியர் தோல்வியுற்றதினுல் கொரிய நாடு முழுச் சுதந்திரமடைந்தது.

## ஐரிஷ் மக்களின் இன விடுதலைப் போராட்டம்

ஐரிஷ் தீவு ஒரு காலம் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாக இருந்தது. ஐரிஷ் மக்கள் மொழியாலும் மதத்தாலும் ஆங்கிலேயரிலும் வேறுபட்டவர். அவர்கள் மொழியால் ஐரிஷ் மொழியையும் மதத்திலே ரோமன் கத்தோலிக்கத்தையும் தழுவியிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சி, தங்கள் மொழியைத் திணித்து, ஐரிஷ் மொழியை ஒழித்து, இனமாற்றம் செய்வதற்கு திட்டமிட்டு செயல்பட்டு வந்தது. ஐரிஷ் மக்கள் தியாகங்கள் பல செய்து, பல துறைகளிலும் பலவிதமாகப் போரிட்டு வந்தனர். அதில் ஒரு துறையினர் நாடகங்கள் பல நடாத்தி மொழியை வளர்த்து, மக்கள் ஊக்கம் பெற பிரச்சாரங்கள் செய்தனர். ஒரு பகுதியினர் போரிட்டும் வந்தனர். இறுதியில் வெளிநாட்டு உதவியுடன் வெற்றியடைந்து, உலகில் அவர்களும் ஓர் சுதந்திர நாட்டு மக்களாகத் திகழ்கிறார்கள்.

## சுதந்திர தமிழ் ஈழம் காண்பீர் வெகு விரைவினில்

தமிழ் ஈழத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடப்பதுபோல், மேற்சொல்லப்பட்ட இரு நாடுகளிலும் நடந்ததா என்பது தெரியவில்லை. இருப்பினும் இவற்றைப் போல் பல நாடுகள் இன்று விடுதலை அடைந்து விட்டன. சில நாடுகளில் இன விடுதலைப் போர் நடந்துகொண்டேயிருக்கிறது. ஈழ நாடும் விடுதலையடைய வரட்டுக் கௌரவங்களை விட்டு சாதி, சமய வேறுபாடுகளை மறந்து ஒன்றுசேர்ந்து, தியாகங்கள் பல செய்திடுவீர். தன் நம்பிக்கைகொண்டு, வாராவினை வந்தாலும் சோராது, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நடந்து போராடுவீர், தமிழ் ஈழம் காண்பீர் வெகு விரைவில். இது வரலாறு கண்ட உண்மை.

## உலகரங்கில் தமிழர் ஈழப் பிரச்சினை

இன்று உலகின் எப்பகுதியிலும், அதாவது அமெரிக்காவும் அதைச் சார்ந்த நாடுகளிலும், சோவியத்ரஷ்யாவிலும் அதைச்சார்ந்த நாடுகளிலும், கூட்டுச்சேரா நாடுகளிலும், தமிழர் ஈழப் பிரச்சினை ஒன்று இருப்பது தெரியும். சர்வதேச யூரிமார் குழு இலங்கை வந்து இப்பிரச்சினையைப் பற்றி அறிந்து சென்றுவிட்டது. அத்துடன் எங்கள் பிரச்சினையைப் பற்றி வருகிற கொமன்வெல்த் பிரதம அமைச்சர்கள் மகாநாட்டின்போது குரல் எழுப்பப்படக் கூடும். அத்துடன் ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் குழுவின் 33வது மகாநாட்டிலும் விவாதிக்கப்படலாம், பலெஸ்ரயின் விடுதலை இயக்கத்தை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தது போல் எங்கள் பிரச்சினையையும் ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்கும்படி நாமும் செய்யவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தனிநாட்டுக் கொள்கைகளை அங்கீகரித்து, அவர்கள் நிறுத்தும் வேட்பாளர்களை வெற்றியுறச் செய்ய ஒவ்வொரு தொகுதியிலிருக்கும் தமிழ் மகனும், மகளும் தங்கள் வாக்குரிமைகளை அவர்களுக்கே செலுத்தவேண்டும். வெற்றியுற்று அணிதிரண்டு செல்லும் பாராளுமன்ற உறுப்பினர் அத்தனை பேரும் பாராளுமன்றத்தை எங்கள் விடுதலை பிரச்சார மேடையாக்குவர். எக்காரணம் கொண்டும் விடுதலை விரும்பாத வீணர்களை அனுப்பாதீர்கள்.

## நமது விடுதலை இயக்கம்

நம்மில் அஞ்சா நெஞ்சம் படைத்த தலைவர்களுமுண்டு, தியாகங்கள் பல செய்திட்ட தொண்டர்களும் உண்டு. நமக்கென என்றும் தழைத்தோங்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ரூரு விருட்சமுமுண்டு. அதன் தலைவர் உலக விடுதலை வீரர்களின் வரிசையில் தோன்றி அமரரான பேரறிஞர் செல்வா, ஈழத் தமிழகத் தந்தை, அரசியல் மேதை. நேர்மை, உண்மை, தியாகசிந்தை கொண்டு செயலதிபர்களாக விளங்கும் தளபதி அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோர் இருக்கிறார்கள். இவர்களின் பின்வரிசையில் அணியாய் அஞ்சாநெஞ்சம் படைத்த பல வீரத் தலைவர்களும் இருக்கிறார்கள். தியாகி தமிழர் வீட்டுப்பிள்ளை சிவகுமாரனைத் தழுவி, முன்னணித் தொண்டர்களாம் கவிஞர் காசிஆனந்தன், பொன் சத்தியசீலன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராசா, ஆகிய வீரத் தளபதிகளின் பின்னால் எண்ணற்ற வீரர் ஏராளமுண்டு பின் ஏன் தயக்கம்? எல்லோரும் கடமை வீரராக மாறிடுவீர்.

## தேர்தல் கால கட்சிகளும் சுய இச்சைகளும்

பாராளுமன்றத் தேர்தல் என்றதும் மழை காலத்தில் தோன்றி அழியும் காளான்கள் போல் பல சுயநலக்கட்சிகளும் சுயநலவாதிகளும் தோன்றி மறைவார்கள். இக்கட்சிகளோ அல்லது சுயேச்சை வாதிகளோ தேர்தலில் தோன்றுவதற்கு பல அசட்டுக் காரணங்களைக் கக்கித் தள்ளுவார்கள். பொது மக்களே இதில் ஏமாறுதீர்கள். கட்சிகளினால் விலக்கப்பட்டு, விரக்தியடைந்த குட்டித் தலைவர்கள், அல்லது சகலதும் கற்றுத் தெளிந்த தலைவர்கள் என்ற இறுமாப்பிலும் இவர்கள் இருப்பர். இவர்களின் நோக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சிதைப்பதே. சில சுயேச்சையாளர்கள் இதுவரையும் சுகவாழ்வு நடத்திவிட்டு சுயஇச்சையைப் பூர்த்தி செய்வதற்கு அதாவது முதலில் வெற்றி அடுத்தது சிறிலங்காவில் எது ஆளும் கட்சியாக வருகிறதோ அதில் முழு மந்திரி அல்லது அரை மந்திரிப்பதவி பெறுவது. சில சிங்களக் கட்சிகளின் வால்பிடிகள், இறுதிவரை தமிழர் விடுதலைக் கூட்டணி சுதந்திரம் பெற்றுக்கொடுக்க முடியாது என்று கூறுவர். இதற்குக் கூறும் பதில், உலக சரித்திரத்திலே ஒரு இனம் மற்ற இனத்துக்கு விரும்பி சுதந்திரம் கொடுத்ததே கிடையாது என்பதே. சந்தர்ப்ப சூழ்நிலையால் அல்லது வேற்றுநாட்டு உதவியுடன் அவை சுதந்திரம் பெற்றதுண்டு.

## சிங்களக்கட்சிகள்

இன்று சிங்கள மக்களுக்குள் முக்கியமான கட்சிகள் ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி, சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி சோஷலிஸ முன்னணியாக உருவாக்கப்பட்ட ஐக்கிய இடதுசாரி சோஷலிஸ முன்னணி இடதுசாரி சோசலிச முன்னணியில் லங்கா சமசமாஜக் கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சிறிலங்கா ஜனநாயகக் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அந்தக் கட்சிகளின் அடிப்படை நோக்கம் எந்த வழியிலாவது ஆளும் கட்சியாக வந்துவிட வேண்டுமென்பது தான்.

இவர்கள் தமிழர்களையும் அவர்களின் கட்சிகளையும் பகடைக் காயாகப் பாவித்துத்தான் இதுவரையும் அதிகாரத்துக்கு வந்திருக்கிறார்கள். செல்வா—பண்டா ஒப்பந்தத்தை திரு. டட்லி சேனநாயக்காவும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் எதிர்த்தனர். அதையிட்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவர் சகாக்களும் கண்டிக்கு பவனி சென்றார்கள். செல்வா—டட்லி சேனநாயக்கா ஒப்பந்தத்தை சுதந்திரக் கட்சி வன்மையாக எதிர்த்தது. அது குடியரசுப் போர்வையில் தமிழர்களுக்கென்று எஞ்சியிருந்த சில உரிமைகளையும் பறித்தது. இன்று தமிழர் விடுதலைக்கூட்டணி சிறிமாவோ அம்மையார் சந்திப்பை நாட்டைப் பிரிப்பதற்கு இரகசிய ஒப்பந்தம் செய்துவிட்டதாக லங்கா சமசமாஜக்கட்சி ஏடுதலையங்கம் தீட்டியது. சிங்கள இளைஞர் முன்னணி தமிழர் ஏற்காத 20 அம்சத் திட்டமே, சிங்களவரின் உரிமைகளை தமிழர்களுக்கு வழங்குகிறதென்று உரைத்து அதை எதிர்க்கின்றது. தமிழர்களுக்கெதிராக நடத்தப்படும் தரப்படுத்தலை நீக்கினால் அது சிங்களவருக்குச் செய்யும் பெரிய அநீதி துரோகமென்கிறார்கள். ஆனதினால் பெரும்பான்மையினரான சிங்களவரின் எக்கட்சிகளும் தமிழர்களின் உரிமைகளை காவாந்து செய்யாது. தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு பல பசப்பு வார்த்தைகளை மட்டும் பேசுவார்கள். செய்கையில் ஒரு நன்மையும் நடக்காது.

தமிழ்பேசும் இனமே எந்தக் சிங்களச் கட்சிகளையோ சுயேச்சைகளையோ நம்பாது மயங்காது தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களுக்கே உங்கள் வாக்குரிமைகளைக்கொடுத்து சுதந்திரம்பெற வழிசெய்வீர்கள்.

—வடலியூர் சொக்கன்

# 1980-ம் ஆண்டுக்கிடையில் தமிழ்ஈழ....

—3-ம் பக்கத்தொடர்

"தமிழர்களின் காணி பறிக்கப்பட்டதுபோலதான் முஸ்லீம்களும் காணிகளை இழந்தோம். யாழ்ப்பாணம் தொடக்கம், மலைநாடு, திருமலை போன்ற பிரதேசமெல்லாம், தமிழர்களின் உயிர்கள் பலியானதைப் போல தான், புத்தளம், கம்பளை, மகியங்கனை, அம்பாறை வரை, கடந்த கால்நூற்றாண்டாக முஸ்லிம்களாகிய நாம் சிங்கள ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டோம். பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். தமிழ் மக்களுக்கு, இந்தச் சிங்கள வெறிபிடித்த ஆட்சியாளர்களால் ஏற்பட்ட அழிவுகளைப் போன்றுதான், முஸ்லிம்களுக்கும் சிங்கள வெறியர்களால் அழிவு ஏற்பட்டன. எனவேதான், தமிழர் விடுதலைக் கூட்டணியோடு, முஸ்லிம் ஐக்கிய முன்னணியும், இணைந்து தமிழீழம் அமைப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக எண்பதாம் ஆண்டுக்கிடையில் தமிழ்பேசும் மக்கள் ஒருமித்துப் போராடி, தமிழீழம் அமைத்தே வாழத்தான போகிறோம்."

—மேற்கண்டவாறு பாண்டிருப்பிலுள்ள பாபர் வீதியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கல்முனை கூட்டணிவேட்பாளர் சட்டத்தரணி ஜனுப் அ. மு. சம்சுதீன் அவர்கள் முழக்கமிட்டார். இதற்கு முன்னர் பாண்டிருப்பு தாளைவெட்டானிலிருந்து ஜனுப் சம்சுதீன் அவர்கள் கூட்டம் நடைபெற்ற இடத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். கவிஞர் பாண்டியூரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கவிஞர் மருதூர்வாணன்பேசுகையில் —"கடந்த காலங்களில் எங்கள் முஸ்லிம் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் தமது சுயநலத்துக்காக சிங்கள ஆட்சிகளுக்கு சாமரை வீசிக் கிடந்தபோதுதான், முஸ்லிம்களின் காணி, மொழி, வர்த்தகம், அனைத்தும் பறிக்கப்பட்டன. முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். இனிமேல் நாம், தனித் தமிழ்நாடு அமைத்து, அதில் எமது தமிழ் சகோதரர்களோடு சுதந்திர புருஷர்களாக வாழ முடிவு எடுத்துவிட்டோம் இந்த உண்மையை யூலை 21ம் திகதி பொதுத்தேர்தலில் முஸ்லிம் மக்கள் எடுத்துக் கூறுவார்கள்; புத்தளம் கல்முனை, சம்மாந்துறை, மூதூர் நான்கு தொகுதிகளிலும் கூட்டணி வெற்றி உறுதியென்றார்.

டாக்டர் ஆ. உதுமாலெட்பை, சட்டத்தரணி அஷ்ரப் தி. பாஸ்கரன் ஆ. வேல் முருகு க. இரத்தினவேல், நீலாவணை தேவராஜ், க. மு. செல்லையா, ஆகியோரும் உரையாற்றினர்.


## நீம் வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப்பை வாங்கி உபயோகியுங்கள். உங்கள் சரும பாதுகாப்புக்கு சிறந்தது.

**ஓர் மில்க்வைற் தயாரிப்பு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிருப்புத் தொகுதிக்கு ஒரு கட்டபொம்மன் கணேசலிங்கம்!

1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் தீர்மானத்தை களனி மாநாட்டில் யூ. என். பி. எடுத்ததும், அக்கட்சியை உதறியெறிந்துவிட்டு, தமிழினத்தின் தன்மானம் காக்கின்ற தமிழரசுக் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டு தமிழர் விடுதலைப் போராட்டத்தில் குதித்த பட்டிருப்பு முன்னாள் பா. உ. அமரர் இராசமாணிக்கம் அவர்கள், உயிர்போகும் வரை இயக்கத்துக்காகவும், இனத்துக்காகவுமே தம்மை அர்ப்பணித்து பணியாற்றியவர். தனது சுயநலமற்ற பணியினால் தமிழரசுக் கட்சியின் தலைவராக ஒரு முறைக்கு இரு முறை தெரிவு செய்யப்பட்டவர்.

அமரர் இராசமாணிக்கம் காட்டிய அதே பாதையில்— தேசியம்பேசும் சிங்களக்கட்சிகளால் தமிழ் இனத்துக்கு எதுவித பலனும் இல்லையென்பதை அனுபவரீதியாக அறிந்து கொண்டு, சிங்கள சிறீலங்கா சுதந்திர கட்சியை உதறியெறிந்துவிட்டு — தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணைந்து தமிழ் ஈழவிடுதலைப்போராட்டத்தில் பட்டிருப்பு தொகுதி மக்களை வழி நடத்தும் ஒப்பற்ற தளபதியாக விளங்குகிறார் பட்டிருப்பு தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிடும் எ·கு மனிதர் திரு. பூ. கணேசலிங்கம் அவர்கள்!

திரு. பூ. கணேசலிங்கம் அவர்கள் சிங்கள சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் உறுப்பினராக இருந்து அந்தக் கட்சியின் சிங்கள இன வெறிப்போக்கையும் தமிழ் விரோதக் கொள்கையையும் நேரடியாக அனுபவ ரீதியாக உணர்ந்து தமிழ்மானம் பொங்கியெழ, குமுறியெழுந்து அக்கட்சியை விட்டு வெளியேறி வந்தவர். தமிழர் விடுதலைக் கூட்டணியொன்றே தமிழினத்தின் தேசிய விடுதலை இயக்கம், தமிழ் ஈழம் அமைப்பதே தமிழினத்தின் சுதந்திரத்துக்கு ஒரே வழி; தந்தை செல்வா அவர்களே தமிழினத்தின் ஒப்பற்ற ஒரே தலைவர்; என்பதையெல்லாம் உளமார அறிந்து தெளிந்து இயக்கத்துடன் தன்னைப் பிணைத்துக்கொண்டவர்.

துடிப்பும், இளமையும் எ·கு உள்ளமும் கொண்ட திரு. கணேசலிங்கம் அவர்கள் தாம், மட்டக்களப்பில் கூட்டணிக்கு எதிராக ரௌடித்தனம் காட்டித்திரிந்த இராசாதிராசர்களை யெல்லாம் அடக்கிவைத்து, கூட்டணி இயக்கத்தின் ஸ்தம்பித நிலையை மட்டக்களப்பில் மாற்றியமைத்தவர்; கூட்டணிக்கு எதிராக பலாத்காரத்தில் இறங்கியவர்களின் கொட்டத்தையடக்கியவர்.

பட்டிருப்பு தொகுதியிலுள்ள பெரிய கல்லாற்றில் 6-11-1932ல் பிறந்த திரு. கணேசலிங்கத்தின் தந்தையார் பெயர் பூபாலபிள்ளை. தமது ஆரம்ப கல்வியை பெரிய கல்லாறு மகா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயம், அரசினர் கல்லூரி ஆகியவற்றிலும், முடித்துக்கொண்ட இவர், மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தகத்தில் டிப்புளோமா கல்வி பயின்றார். அத்துடன் இலண்டன் பல்கலைக்கழக இடைநிலைப் பரீட்சையில் (Inter B. Sc.) சித்தியடைந்தார்.


1956சித்திரையில் காலால் திணைக்களத்தில் பரிசோதகராக சேர்ந்த திரு. கணேசலிங்கம் 1973ல் மட்டக்களப்பு காலால் குதமுகாமையாளராகப் பதவியுயர்ச்சி பெற்றார். இருந்தும் சிங்களம் படிக்க மறுத்து 1976ம் ஆண்டு சித்திரை மாதம் சேவையிலிருந்து இளைப்பாறிக் கொண்டார்.

1972ல் திருமதி முத்துலட்சுமியை திருமணம் செய்து கொண்ட திரு. கணேசலிங்கத்துக்கு இரண்டு ஆண் சிங்கக்குட்டிகள் உண்டு.

1974ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர். இதன் எதிரொலியாக மட்டக்களப்பு குத முகாமையாளர் பதவியில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து மேலும் அரசாங்க பதவியில் இருந்து தமிழருக்குச் சேவையாற்ற முடியாதெனக் கருதி ஓய்வு பெற்றார். சிங்கள மொழியில் கருமம் ஆற்ற முடியாது என்றும் மறுத்து 1976ம் ஆண்டு சித்திரையில் ஓய்வு பெற்றார்.

சர்வதேச இயக்கமான லயன்ஸ் கழகம் மட்டக்களப்பில் உருவாக வேண்டும் என உழைத்த இவர் அக்கழகத்தின் முதற்செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் தமது சேவையினால் கழகத்தினர் மதிப்பைப் பெற்று இன்று கழகத்தின் இணைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

விவசாயத்தில் ஆர்வம் உள்ளவர் அரசசேவையில் இருந்தபோதே விவசாயத்தில் ஈடுபட்டார். கூட்டணி நடவடிக்கைகளிலும் நேரடி போராட்டங்களிலும் தீவிரமாக ஈடுபட்டவர்.



மட்டக்களப்பில் பிரதேச பிரிவினையை எழுப்பி கிழக்கு, வடக்கு என்று மாவட்டப் பிரிவினைகளை ஏற்படுத்தி தமிழினத்தைக் கூறுபோட சிலர் முயற்சித்தபோது, அதைக் கடுமையாக எதிர்த்து நின்றவர் திரு. கணேசலிங்கம்.

பட்டிருப்புதொகுதி தமிழ் மக்களினதும் — குறிப்பாக இளைஞர்களினதும் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட திரு. கணேசலிங்கம் அவர்கள் அமரர் திரு. இராசமாணிக்கத்தின் வழிநின்று பட்டிருப்பு தொகுதியின் தலைமையை யூலை21 பொதுத் தேர்தலில் ஏற்று, பட்டிருப்பு பா. உ. வாகி, அங்கு தமிழ்ஈழத்தின் தேசியக் கொடியான உதயசூரியன் கொடியை ஓங்கிப் பறக்க விடுவார் என்பது திண்ணம்.

## 'தமிழரை வழிநடத்தும் வல்லமை கூட்டணிக்குமட்டுமே உண்டு!'

### முரசுமோட்டையில் ஆனந்தசங்கரி

'தந்தை செல்வா கடந்த தேர்தல் முடிவு வெளிவந்து கொண்டிருந்த வேளையில் தமிழ் இனத்தை இனி ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்றார் 1970ம் ஆண்டு அவர் அவ்வாறு சொன்னது எனக்கு ஆச்சரியம் அளித்தது. ஆனல் அவருடைய வாக்கு எவ்வளவு தீர்க்க தரிசனமானது என்பதை ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே உணர்ந்து கொண்டேன். இந்த அரசாங்கம் தமிழரை மீளவெட்டி ஆழப் புதைக்கும் அரசியல் அமைப்பை கொண்டுவந்த வேளையில் தனது ஆட்சி எல்லா இனத்தவரையும் கொண்டது என்று உலகிற்கு கணக்குக்காட்ட குமாரசூரியரை பக்கத்துணையாக பயன்படுத்திக் கொண்டது.

"வடபகுதியின் சக பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலே கடந்த இரு ஆண்டிலும் எழுபது லட்சம் ரூபாவைப் பெற்று தொகுதி அபிவிருத்திக்கு செலவுசெய்துள்ளேன். மக்களால் நியமிக்கப்பட்ட கிளிநொச்சித் தொகுதி பூசாரியாக நான் இருக்க அமைச்சர் நியமித்த கங்காணிகள் தங்களால்தான் கிளிநொச்சி வாழுகின்றது என்று தம்பட்டம் அடித்துத் திரிகின்றனர். இந்தக் கங்காணிகள் ப. நோ. கூ. சங்கங்களிலும், விளைவுப் பெருக்க குழுக்களிலும் தலைமை வகித்து செய்த திருகுதாளங்களை மக்கள் மறந்துவிடவில்லை. ஊழல் அம்பலத்துக்கு வர இவர்கள் இப்போது கோடேறுகின்றனர்.

"பட்டினசபையிலே மக்களிடம் வரிப்பணமாக பெறப்பட்ட தொகையில் மீதமாக இருந்த 12 லட்சம் ரூபாவை கொட்டி சிங்கள கலாச்சாரத்துக்கு அமைய ஒரு தலதா மாளிகையை அமைச்சர் கட்டி இருக்கின்றார். 21ம் திகதி மக்கள் அளிக்கின்ற தீர்ப்பை தெரிந்த பின்தான் அமைச்சருக்கு தன் தவறுகள் புலப்படும்."



இவ்வாறு முரசுமோட்டையில் நடந்த தேர்தல் பிரச்சாரகூட்டத்தில் பேசும் போது திரு. வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார். சாவகச்சேரி வேட்பாளர் வ. ந. நவரத்தினம், தேர்தல் பொறுப்பாளர் இ. கிருஷ்ணராசா மாவட்ட இணைச் செயலாளர்கள் ப. வை. ஜெயபாலன் க. ஏகாம்பரம் இளைஞர் பேரவைத் தலைவர் ஐ. திருஞானம் ஆகியோரும் இன்னும் பலரும் உரையாற்றினர்.

## திருடர்கள் ஜாக்கிரதை!

நல்லூர் முருகன் கோவில் இந்துக்களது புண்ணிய ஆலயம்! மடுமாதா கிறீஸ்த்தவர்களது அருள் சுரக்கும் புண்ணிய மாதா! மண்கும்பான் பள்ளிவாசல் இஸ்லாமியரது புண்ணிய பூமி. தமிழ் ஈழத்தின் இப்புண்ணிய ஆலயங்களில் தினசரி பக்தர்கள் கூடுவதுண்டு. பக்தர்கள் நோக்கம் இறைவனை வழிபடுவதே. இம்மூன்று தமிழ் மதங்களின் புண்ணிய ஆலயங்களில் ஆண்டுக்கொருமுறை திருவிழாக்களும் அப்போது தினசரி கூடும் பக்தர்களைவிட அதிகமான பக்தர்கள் கூடுவர். சனநெருக்கடி மிகுந்த இந்த நேரம்தான் தாலி அறுக்கும் திருடர்க்கு பொருத்தமான நேரம். எனவே திருடர்கள் திருவிழாக் காலத்தில் சனத்தோடு சனமாய் நின்று கொள்ளுவர். இது போல்தான் தமிழ் ஈழம் என்ற இறைவனை தினசரி வழிபட்ட உண்மைப் பக்தர்களுடன் தேர்தல் திருவிழா வந்துவிட்டதால் போலிப் பக்தர்களும் கலந்து நிற்கிறார்கள். தமிழ்ப் பக்தர்கள் தமிழீழம் மலர்க என்று ஒருமுறை கூறிமுடிப்பதற்குள் தேர்தல் திருவிழாவில் நிற்கும் போலிப் பக்தர்கள் மூன்றுமுறை உரக்க தமிழ் ஈழம் மலர்க என கூறி தானும் பக்தன் தான் என காட்ட முற்படுகிறான். இவர்கள் நோக்கம் ஆடி 21ல் நடைபெறும் தேர்தல் திருவிழாவின் இறுதி நாளில் மக்களின் வாக்கு என்ற தாலியை அறுப்பதே எனவேதான் ஒலிபெருக்கியை பூட்டி திருடர்கள் ஜாக்கிறதை என குரல் கொடுக்கிறேன்.

—சாவகச்சேரி இளைஞர் எழுச்சி மகாநாட்டில்

**வண்ணை ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனக் கலவரம் ஓய்ந்தும் பொலீஸ் கலவரம் ஓயவில்லை!

## திருக்கோணமலையின் இன்றைய நிலை! சம்பந்தரின் சாதனைகள்!

**திருகோணமலையில் வாழவந்த—பிழைக்கவந்த சிங்களச் சில் லறைகளுடைய ஆணவமுயற்சி இங்குள்ள தமிழ்ச்சிங்கங்களால் முறி யடிக்கப்பட்ட பின்னர் சிங்களப் பொலிஸ்காரர்களின் ஆணவம் தலை தூக்கி நிற்கின்றது. பொலிசாரின் உதவியுடன் நடைபெற்ற சிங்களவர் களுடைய கொட்டத்தை மட்டந்தட்டிய மறத்தமிழர்கள் மீது, இல்லாத பழியெல்லாம் சூட்டி இரவிரவாகத் தூக்கிக் கொண்டிருக்கும் தமிழ் வீரர்களையும்—பெண்களையும் மனிதாபிமானமற்ற முறையில் பொலி சார் தாக்கியுள்ளனர்—**

பெரிய கடையில் அம்பாள் கபே அருகே மொட்டத் துரையன் என்கிற தமிழ் மறவனை அடித்து நொருக்கிய பின்னர் அங்கு தென்பட்ட அத்தனை பொதுமக்களையும் மிருக வெறிகொண்டு தாக்கினார்கள்.

அதன் பின்னர் ஜோதி படமாளிகையில் படம் பார்த்துவிட்டு வந்த ஆண்கள், பெண்கள் இருபாலாரையும் நன்றாகத் தாக்கி ஹோட்டல் எவரெஸ்டையும் தூளாக்கினார்கள். சுங்கவீதியைச் சேர்ந்த இம்மானுவல் என்பவருடைய வீட்டையும் சேதப்படுத்திக் கண்ணாடிகளையும்உடைத்ததோடன்றி மறைந்து நின்று இரண்டு கத்திகளாலும் அவர் வீட்டிற்கு எறிந்தனர். ஆயுதங்களிரண்டும் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இனக்கலவரம் ஓய்ந்தும் பொலிஸ் கலவரம் ஓய்ந்தபாடில்லை.

யூ. என். பி.த் தலைவர் ஜே. ஆருடைய பாதுகாவலுக்கென இங்கு வருகை தந்த விசேஷ பொலிசாரே இந்த அட்டூழியங்கள் புரிந்தவர்களாவார்கள். ஜே ஆரின் பாதுகாவலர்களே இப்படி என்றால் ஜே. ஆர். எப்படியிருப்பார் என்பதைச் சொல்லித்தானா தெரிய வேண்டும்?

இந்தக்கொடுமை நிகழ்ந்த போதெல்லாம் திரு. சம்பந்தர் அவர்கள் செய்த சேவைகளை திருக்கோணமலை நிச்சயமாக மறக்காது.

"இப்போதுதான் எங்களுக்கும்—எங்கள் தமிழ் மண்ணுக்கும் தகுதியான ஒருவர்—வீரமான—விவேகமான—எதிரிகட்கு விட்டுக்கொடுக்காத சமரன் சம்பந்தன் கிடைத்துள்ளார்" என்று இங்கு சகலரும் ஒருமுகமாக இன்று வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

"சாதாரண அபேட்சகராகவே இருக்கும்போது இப்படி என்றால் எம்.பி.யாக வந்தால் என்ன செய்வார்" என்று இவரது துடிப்பான—துணிவான செயல்களைப் பார்த்துப் பொறுமைப்படுகின்றவர்களுமுண்டு. திருஞானசம்பந்தனுடைய பாடல்பெற்ற பூமியிலே திரு அழிந்து இப்போது ஞானம் பிறந்து சம்பந்தன் என்கின்ற பெயரிலேயே எங்கள் வேட்பாளர் வந்துள்ளார்.

மற்றவர்களைப்போல் அல்லாது நன்றாகத் திட்டம் போட்டுச் சேவை செய்யும் திறன்படைத்தவர் சம்பந்தர் என்பதை இன்று நிரூபித்துக் கொண்டிருக்கும் அவருடைய வெற்றிக்குப் பின் திருகோணமலையில் நிச்சயமாகப் பெரிய மாற்றங்கள் உண்டு என்பதை எதிர்பார்க்கலாம்—

அரசாங்கம் எவ்வளவுதான் வன்செயல்களைப் பாவித்தபோதும் தமிழர்களுடைய விடுதலை வேட்கையை — வீரசுதந்திர உணர்வை தனித்தமிழ் ஈழத்தின் தணியாத தாகத்தை — நிட்சயமான தனித்துவத்தை — தமிழருக்குச் சொந்தமான மண்ணை—தமிழீழத்தின் தலைநகரை யாருக்கும் தாரைவார்த்துக் கொடுக்கமாட்டார்கள் என்பதைச் சிங்களவரும், ஆட்சியாளரும் உணர்ந்துவிட்டனர். ஆனால் மூன்றுவது தடவையும் மூக்குடைபடப் போகின்ற நவராஜரெத்தினுவும் — அவரது கும்பலும் உணர்வதாயில்லை.

—எஸ். வில்வராஜன்



இரா. சம்பந்தர்

## குமாரின் சுய..

—1-ம் பக்கத் தொடர்

ஆரம்பத்தில் 'நானும் தமிழ்ஈழக் கொள்கைக்கு ஆதரவுதான்; வெற்றிபெற்றதும் கூட்டணியுடன்தான் சேருவேன்' என்று மழலை அரசியல் பேசிவந்த திரு குமார் பொன்னம்பலம், இப்போது தமிழ் ஈழக் கோரிக்கையை எதிர்த்து தமது மேடைகளில் வாய்க்கு வந்தபடி கன்னபின்னவென்று பேசிவருகிறார்; அத்துடன் தமிழ்ஈழக் கொள்கையை எதிர்த்து அவரது மேடைகளில் பேசப்படும் பேச்சுக்களையெல்லாம் உற்சாகமாக கைதட்டி வரவேற்கிறார்.

சுய இச்சை வேடத்தில் வந்திருக்கும் குமார் பொன்னம்பலத்தின் சுய ரூபம் என்ன என்பது இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. தமிழினத்தை கடந்த ஏழு ஆண்டுகளாக படுகொலை செய்துவந்த சிங்களக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவுடனேயே திரு. குமார் யாழ்ப்பாணத்தொகுதியில் சுய இச்சையாக போட்டியிடுகிறார் என்பது அம்பலத்துக்கு வந்துவிட்டது.

அண்மையில் கொழும்புத்துறையில் குமாரை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் யாழ்தொகுதி சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகரான வேட்பாளர் திரு. வே. நடராசா அவர்களே குமாரின் முகமூடியைக் கழற்றி அவரது உண்மை வடிவத்தை யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக்காட்டினார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்தொகுதி ஆதரவாளர்கள் அனைவரும் குமாரையே ஆதரிக்கவேண்டுமென்றுவேண்டுகோள் விடுத்த திரு. நடராசா, அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் ஆலோசனையின் பேரில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேலிடத்தின் அனுமதியோடுதான் மேற்படி கூட்டத்தில் குமாரை ஆதரித்து தாம் பேசுவதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன் இக்கூட்டத்தில் தனிநாடு கொள்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நடராசா தாக்கிப் பேசிய போது, அதை கைதட்டி வரவேற்றிருக்கிறார் குமார் பொன்னம்பலம்.

உலகத் தமிழ் மாநாட்டின் போது யாழ்ப்பாணத்தில் ஒன்பது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்; புத்தளம் பள்ளிவாசலில் ஏழு முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்; முஸ்லிம்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டன; முஸ்லிம்களின் வர்த்தகம் பறிக்கப்பட்டது; இதுபோல பல கொடுமைகளும் சிறிலங்கா ஆட்கியில்தான் நடைபெற்றன; இந்தத் தமிழ் விரோத—தமிழின விரோத—சிங்களக் கட்சியின் கையாள்தான் குமார் பொன்னம்பலம் என்பது இப்போது நிதர்சனமாகிவிட்டது. இந்த உண்மையை புட்டுவைத்து, யாழ்ப்பாண தொகுதி மக்களின் கண்களைத் திறந்து வைப்பதற்கு காரணமாக இருந்த திரு. நடராசாவை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

சுயேச்சை வேடத்தில் வந்த குமார் பொன்னம்பலத்தின் உண்மை உருவம் வெளிப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் — முஸ்லிம் விரோதக் கட்சியொன்றின் கையாளான அவருக்கு தகுந்த பாடத்தை யூலை 21 பொதுத்தேர்தலில் புகட்டுவதற்கு யாழ்தொகுதி தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள் தயாராகக் காத்திருக்கிறார்கள்.

## சுதந்திரன் ஆசி...

—1-ம் பக்கத் தொடர்

பிரதேச விஷம் திட்டமிட்டு ஊட்டப்படுகிறது. காசி ஆனந்தன் யாழ்ப்பாணத்தாரின் கையாள் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது. இந்த விஷமப் பிரசாரத்தில் ஈடுபடமறுத்து சிறைமீண்ட தமிழ் இளைஞர்களில் ஒருவராகிய திரு. ஜெயன், தற்போது கவிஞர் காசி ஆனந்தனின் மேடைகளில் முழங்கி வருகிறார்.

அத்துடன் மட்டக்களப்பில் வன்முறையும் பலாத்காரமும் தாராளமாகக் கட்டவிழ்த்துவிடப்படுகிறது மட்டக்களப்பு 3ம் வட்டாரம் கல்லடித்தெருவில் 1-7-77ல் நடைபெற்ற காசி ஆனந்தன் கூட்டத்துக்கு சென்ற பெண்கள் வழியிலே குண்டர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு விரட்டப்பட்டனர். தங்கவேலாயுதம் என்ற யாழ்ப்பாண இளைஞர் தாக்கப்பட்டார். மேற்படி கூட்டம் முடிவடைந்து திரும்பிச் செல்லும்போதும் பொது மக்கள் குண்டர்களின் தாக்குதலுக்கு ஆளானார்கள்.

இத்தாக்குதலின் விளைவாக திரு. பாக்கியராஜா, சிலாபத்தைச்சேர்ந்த நவரத்தினம் ஆகிய இளைஞர்களின் மண்டை பிளந்தது.


மேற்படி கூட்டத்தில் வீசப்பட்ட இரண்டு கற்கள் காசி ஆனந்தன் அவர்களால் ஏலம் விடப்பட்டு, 75 ரூபாவுக்கு விற்பனையாகியது.

## கார்ட்போட் இடி..

—1-ம் பக்கத் தொடர்

மானை ஆதரித்து பிரச்சாரம் செய்யவேண்டாம் என்றும் எச்சரித்தார்கள்.

த. இ. பே. அமைப்பாளர் த. மகாசிவம் த. வி. கூ. தலைவர் தொண்டமான் அவர்களை ஆதரித்து தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார். நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் த. வி. கூ. தலைவர் தொண்டமான் பல்லாயிரக் கணக்கானமேலதிக வாக்குகளைப்பெற்று முதலாவது பா. உ. ஆக தெரிவுசெய்யப்படுவார் என்பது உறுதியாகிவிட்டது. இதனால் கொதிப்படைந்து வரும் ஐ. தே. க. வின் குண்டர்கள் இவ்வாறு பயமுறுத்தல் வேலைகளிலும் ஈடுபடத்தொடங்கி விட்டனர். ஐ. தே. க. ஆதரவாக பிரச்சாரம் செய்வதில் மலையக ஐக்கிய இளைஞர் முன்னணியினரும் ஈடுபட்டுள்ளனர். எனினும் த. இ.பேரவையினர் இ. தொ. கா. தலைவர் தொண்டமானை ஆதரித்து மிகவும் துணிவாகதொடர்ந்தும் தீவிரபிரச்சாரம்செய்து வருகின்றனர்.



குரும்பசிட்டியைச் சேர்ந்த இளம் சட்டத்தரணி கே. வி. மகாதேவன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தீவிர ஆதரவாளர்களில் ஒருவர் 1975ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வா போட்டியிட்டபோது, அவரை ஆதரித்து பிரசாரம் செய்தார். அப்போது எதிரிகள்வீசியதிராவகம் மகாதேவனின் கண்களை இழக்கச்செய்தது. உடலில் பல இடங்களிலும் தீக்காயங்கள் ஏற்பட்டன. 'அஸிட் வீச்சு இலட்சிய வாதிகளை என்னசெய்யமுடியும்? கண்களை இழந்த நிலையிலும் அண்மையில் மயிலிட்டியில் நாவலரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் திரு. மகாதேவன் கலந்துகொண்டு உரையாற்றும் உருக்கமான காட்சி இது.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜூலை மாதம் 6ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org